தின கனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com




RNI-TNTAM/2023/88253

நமது
# தின கனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்







| Vol: 02 | Issue: 149 | 4 Pages | 27.12.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 149 | 4 பக்கங்கள் | 27.12.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்**
**கொல்லாமை சூழ்வான் தலை**

**விளக்கம்: வாழ்க்கையின் தன்மையைக்கண்டு அஞ்சித் துறந்தவர்கள் எல்லாரிலும், கொலைசெய்வதற்க்கு அஞ்சிக் கொல்லாத அறத்தைப் போற்றுகின்றவன் உயர்ந்தவன்.**

## ரஷியா: போலீஸ்காரரை கீழே தள்ளிவிட்ட நெதர்லாந்து நாட்டவருக்கு 3 ஆண்டுகள் சிறை



மாஸ்கோ, டிச.27

நெதர்லாந்தை சேர்ந்த ஹெரி ஜானிஸ் வென் ஹுர்டன் ரஷியாவில் வசித்து வந்தார். இவர் கடந்த அக்டோபர் மாதம் மாஸ்கோவில் போலீஸ்காரருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டார். போக்குவரத்து சிக்னலுக்கு வைக்கப்பட்டிருந்த பல கையை உடைத்ததாக ஹெரியிடம் ரஷிய போலீஸ்காரர் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

அப்போது, ரஷிய போலீஸ்காரரை ஹெரி கீழே தள்ளிவிட்டார். மேலும், அவரது முகத்தில் தாக்கினார். இதையடுத்து, ஹெரியை கைது செய்த ரஷிய போலீசார் அவரை மாஸ்கோவில் வீட்டு காவலில் வைத்தனர். மேலும், அவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது.

இந்நிலையில், போலீஸ்காரரை கீழே தள்ளிவிட்ட வழக்கில் ஹெரி ஜானிசுக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து ரஷிய கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. இந்த சம்பவம் ரஷியா, நெதர்லாந்து இடையேயான உறவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## அமெரிக்காவின் தேசிய பறவையாக வழுக்கை கழுகு அறிவிப்பு

வாஷிங்டன், டிச.27

வழுக்கை கழுகு (Bald Eagle) வட அமெரிக்காவில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. தலைப்பகுதியில் வெள்ளை நிறம் கொண்டுள்ள இந்த கழுகு அமெரிக்காவில் சக்தி மற்றும் வலிமையின் அடையாளமாக கருதப்படுகிறது. அமெரிக்க வரலாற்றுடன் வழுக்கை கழுகுகளுக்கு 240 ஆண்டுகளுக்கு மேல் தொடர்பு உள்ளது.

இதையடுத்து, வழுக்கை கழுகை அமெரிக்காவின் தேசிய பறவையாக அறிவிக்க வேண்டுமென கோரிக்கை எழுந்து வந்தது.

இந்நிலையில், வழுக்கை கழுகு அமெரிக்காவின் தேசிய பறவையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான மசோதாவிற்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ஒப்புதல் அளித்துள்ளார். இதன் மூலம் வழுக்கை கழுகு அமெரிக்காவின் தேசிய பறவையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## கஜகஸ்தான் விமான விபத்து 42 பேர் பலி

அஸ்டானா, டிச.27

அசர்பைஜான் தலைநகர் பாகு நகரில் இருந்து ரஷியாவின் ட்ரோஸ்னி நகருக்கு பயணிகள் விமானம் புறப்பட்டது. இந்த விமானத்தில் 67 பேர் பயணித்தனர்.

விமானம் கஜகஸ்தான் நாட்டின் வான்பரப்பில் சென்று கொண்டிருந்த போது, அதிக பனிமூட்டம் நிலவியுள்ளது. இதனால், விமானத்தை கஜகஸ்தானில் உள்ள அக்டாவ் நகரில் உள்ள விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்க விமானி முயற்சித்துள்ளார். அப்போது திடீரென விமானத்தின் மீது பறவைகள் மோதியுள்ளன.

இதையடுத்து, விமானத்தை வேகமாக தரையிறக்க விமானி முயற்சித்துள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக விமானம் திடீரென கிழே விழுந்து வெடித்து சிதறியது. இந்த சம்பவத்தில் 42 பேர் உயிரிழந்தனர். மேலும், 25 பேர் படுகாயமடைந்தனர்.

இதையடுத்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். மேலும், இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பழிவாங்கிய முன்னாள் கூட்டாளி.. போதைப்பொருள் கடத்தல்காரன் சுனில் யாதவ் அமெரிக்காவில் சுட்டுக்கொலை



கலிபோர்னியா: டிச.27

இந்தியாவின் பஞ்சாப் மாநிலம் பாசில்கா மாவட்டத்தைச் சேர்ந்த போதைப்பொருள் கடத்தல்காரர் சுனில் யாதவ் அமெரிக்காவில் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த கொலைக்கு நிழலுலக தாதா லாரன்ஸ் பிஷ்னோயின் கூட்டாளி ரோகித் கோடரா பொறுப்பேற்றுள்ளார்.

"எங்கள் சகோதரர் அங்கித் பாது என் க வுன் ட ரி ல் சுட்டுக்கொல்லப்பட்டார். இதற்காக சுனில் யாதவ் பஞ்சாப் போலீசாருடன் இணைந்து செயல்பட்டார். இதற்காக நாங்கள் அவரைப் பழிவாங்கினோம். அங்கித் பாதுவின் என்கவுன்டரில் அவரது பெயர் அடிபட்டவுடன் நாட்டை விட்டு ஓடிவிட்டார். அமெரிக்காவில், அவர் எங்கள் சகோதரர்கள் பற்றிய தகவல்களை பரப்பி வந்தார்" என ரோகித் கோடரா கூறி உள்ளார்.

கொலை செய்யப்பட்ட சுனில் யாதவும் லாரன்ஸ் பிஷ்னோயின் கும்பலைச்சேர்ந்தவர்தான். ராஜஸ்தானில் இவர்மீது கொலை, கொள்ளை, போதைப் பொருள் கடத்தல் என பல்வேறு வழக்குகள் உள்ளன. பாகிஸ்தான் வழியாக இந்தியாவுக்குள் போதைப்பொருள் கடத்துவதில் பிரபலமானவர். சில ஆண்டுகளுக்கு முன், 300 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டபோது இவரது பெயர் வெளியானது.

பின்னர் லாரன்ஸ் பிஷ்னோயிடம் இருந்து பிரிந்து தனித்து செயல்பட்டு வந்தார். அமெரிக்காவுக்கு செல்வதற்கு முன்பு சுனில் யாதவ், துபாயில் வசித்து வந்தார்.

சமீபத்தில், சுனில் யாதவுக்கு எதிராக ராஜஸ்தான் காவல்துறை ரெட் கார்னர்நோட்டீஸ்வெளியிட்டது.துபாயில்உள்ளபுலனாய்வுஏஜென்சிகள் மூலம் அங்குள்ள அவரது கூட்டாளியையும் கைது செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சாலை விபத்தில் உயிரிழந்த 3 பேர் குடும்பத்துக்கு நிதியுதவி முதல்வர் அறிவிப்பு

சென்னை, டிச.27

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகே இன்று அதிகாலை காரை ஓட்டிக் கொண்டிருந்த செல்வராஜ் தூக்கம் கலைவதற்காக காரை ஓரமாக நிறுத்தி தண்ணீரை எடுத்து முகத்தை கழுவிக் கொண்டிருந்த போது, பின்னால் வந்த வாகனம் ஒன்று பயங்கரமாக அவர்களது காரின் மீது மோதியது. இதில் கார் அருகில்இருந்தபள்ளத்தில்உருண்டு விழுந்தது. நொறுங்கிய காருக்குள் 5 பேரும் சிக்கிக் கொண்டனர்.

இந்த கோர விபத்தில் செல்வராஜ், விஜயகுமார், விக்னேஷ் ஆகிய 3 பேரும் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். மகேஷ்குமார், ராஜ்குமார் இருவரும் பலத்த காயங்களுடன் உயிருக்கு போராடினர்.

இதுபற்றி தகவல் அறிந்ததும் எட்டயபுரம் போலீசார் அவர்கள் இருவரையும் மீட்டு கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்நிலையில் விபத்தில் உயிரிழந்தவர்களின்குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் தெரிவித்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்த 3 பேர் கு டு ம் ப த் தி ன ரு க் கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து நிதியுதவி வழங்கவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

உ யி ரி ழந் த வ ர் க ளின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சமும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 2 பேருக்கு தலா ரூ.50,000 நிதியுதவி அறிவிக்கப்பட்டுள்ளது. சாலை விபத்தில் உயிரிழந்த 3 பேர் குடும்பத்துக்கு நிதியுதவி முதலமைச்சர் அறிவிப்பு




சென்னை, டிச.27

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகே இன்று அதிகாலை காரை ஓட்டிக் கொண்டிருந்த செல்வராஜ் தூக்கம் கலைவதற்காக காரை ஓரமாக நிறுத்தி தண்ணீரை எடுத்து முகத்தை கழுவிக் கொண்டிருந்த போது, பின்னால் வந்த வாகனம் ஒன்று பயங்கரமாக அவர்களது காரின் மீது மோதியது. இதில் கார் அருகில்இருந்தபள்ளத்தில்உருண்டு விழுந்தது. நொறுங்கிய காருக்குள் 5 பேரும் சிக்கிக் கொண்டனர்.

இந்த கோர விபத்தில் செல்வராஜ், விஜயகுமார், விக்னேஷ் ஆகிய 3 பேரும் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். மகேஷ்குமார், ராஜ்குமார் இருவரும் பலத்த காயங்களுடன் உயிருக்கு போராடினர்.

இதுபற்றி தகவல் அறிந்ததும் எட்டயபுரம் போலீசார் அவர்கள் இருவரையும் மீட்டு கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்நிலையில் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் தெரிவித்துள்ளார். விபத்தில் உயிரிழந்த 3 பேர் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து நிதியுதவி வழங்கவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

உ யி ரி ழந் த வ ர் க ளின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சமும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 2 பேருக்கு தலா ரூ.50,000 நிதியுதவி அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறிய ரத்தப் பரிசோதனை நிலையங்களை காக்க வேண்டும்: அரசுக்கு டாக்டர்கள் சங்கம் கோரிக்கை



சென்னை, டிச.27

சென்னையில் சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் சார்பில் செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது. அப்போது அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் ரவீந்திரநாத் கூறியதாவது:

தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் கடந்த மாதம் வெளியிட்ட அரசாணையில், ரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே மற்றும் மற்ற பரிசோதனை நிலையங்கள் செயல்படத் தேவையான அளவு இடவசதி குறித்த நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி நகர்புறத்தில் உள்ள ரத்தப் பரிசோதனை நிலையங்கள், ஜெனிடிக் பரிசோதனை நிலையங்கள், நோய்குறியியல் பரிசோதனை நிலையங்கள் மற்ற பிறவற்றிற்கும், 500 முதல் 700 சதுர அடி பரப்பளவும், கிராமப்புறத்தில் உள்ள இத்தகைய பரிசோதனை நிலையங்களுக்கு 300 சதுர அடி பரப்பளவும் இருக்க வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த அரசாணை பெரிய மற்றும் கார்ப்பரேட் கிளினிக்கல் ரத்தப் பரிசோதனை நிலையங்களுக்கு சாதகமானதாக அமைந்துள்ளது. அவற்றின் வளர்ச்சிக்காக, லாப வேட்கைக்காக 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறிய ரத்தப் பரிசோதனை நிலையங்களை மூடுவிடும் வகையில் உள்ளது. எனவே, இந்த அரசாணையை உடனடியாக தமிழ்நாடு அரசு திரும்பப் பெற வேண்டும்.

## உயர்த்தப்பட்ட பணிக்கொடையை டான்சி நிறுவன ஓய்வூதியதாரர்களுக்கு 2006 முதல் வழங்கக் கோரிய வழக்கு தள்ளுபடி: ஐகோர்ட் உத்தரவு

சென்னை, டிச.27

ஆறாவது ஊதியக்குழு பரிந்துரை அடிப்படையில் உயர்த்தப்பட்ட பணிக்கொடையை, டான்சி நிறுவன ஓய்வூதியதாரர்களுக்கு 2006ம் ஆண்டு முதல் வழங்கக் கோரிய வழக்கைதள்ளுபடிசெய்துசென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

6வது ஊதியக்குழு பரிந்துரையை ஏற்று, தமிழக அரசு 2009ம் ஆண்டு அரசாணை பிறப்பித்தது. இதன் அடிப்படையில், தமிழ்நாடு சிறு தொழில் கழகமான டான்சி நிறுவன ஓய்வூதியதாரர்களுக்கான பணிக்கொடை ₹3 லட்சத்து 50 ஆயிரம் என்பது ₹10 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. இதை எதிர்த்து டான்சி நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற 34 பேர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு



தாக்கல் செய்திருந்தனர். அந்த மனுவில், 6வது ஊதியக்குழு பரிந்துரை அடிப்படையில் பணிக்கொடை உயர்வு அரசு ஊழியர்களுக்கு 2006 முதல் அமல்படுத்தப்படும் நிலையில், டான்சி நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு 2010 முதல் அமல்படுத்தப்படும் என அறிவித்துள்ளது பாரபட்சமானது என்பதால், உயர்த்தப்பட்ட பணிக்கொடையை 2006ம் ஆண்டு முதல் கணக்கிட்டு வழங்க உத்தரவிட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.


இந்த வழக்கை விசாரித்த நீதிபதி சி.குமரப்பன், பணிக்கொடைச் சட்டப்படி, அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு உயர்த்தப்பட்ட பணிக்கொடை 2010ம் ஆண்டு முதல் பெற உரிமை உள்ளதாக உச்ச நீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் உத்தரவு பிறப்பித்துள்ளதைச்சுட்டிக் காட்டி, டான்சி நிறுவனம் வெளியிட்ட அறிவிப்பில் எந்தத் தவறும் இல்லை எனக் கூறி, வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

## திருவண்ணாமலை மலை உச்சியில் 11 நாட்களாக காட்சியளித்த மகாதீபம் நிறைவடைந்தது: தீப கொப்பரை கோயிலுக்கு கொண்டுவரப்பட்டது

திருவண்ணாமலை, டிச.27

திருவண்ணாமலையில் 2,668 அடி உயர மலைமீது கடந்த 11 நாட்களாக பக்தர்களுக்கு காட்சியளித்த மகாதீபம் நேற்று முன்தினம் இரவுடன் நிறைவடைந்தது. அதைத் தொடர்ந்து, தீப கொப்பரை அண்ணாமலையார் கோயிலுக்கு நேற்று கொண்டுவரப்பட்டு சிறப்பு பூஜை செய்யப்பட்டது.

திருவண்ணாமலையில் உலக பிரசித்தி பெற்ற கார்த்திகை தீபத்திருவிழா, கடந்த 4ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி விமரிசையாக நடந்தது. விழாவின் நிறைவாக, கடந்த 13ம் தேதி மகா தீப பெருவிழா நடந்தது. அப்போது, 2,668 அடி உயர மலைமீது மகாதீபம் ஏற்றப்பட்டது. நேற்று முன்தினம் இரவு வரை தொடர்ந்து 11 நாட்கள் மலை மீது மகாதீபம் பக்தர்களுக்கு காட்சியளித்தது. இதற்கு4500கிலோ நெய் மற்றும் 1500 மீட்டர் திரி பயன்படுத்தப்பட்டது.



இ தை த் தொடர்ந்து நேற்று காலை மலையில் இருந்து சுமார் 200 கிலோ எடையுள்ள, செப்பினாலான சுமார் ஐந்தரை அடி உயரம் கொண்ட தீப கொப்பரையை ஊ ழி ய ர் க ள் தொளில் சுமந்தபடி மலையில் இருந்து கோயிலுக்கு கொண்டுவந்தனர். நேற்று காலை 7 மணிக்கு மலை உச்சியில் இருந்து புறப்பட்ட தீப கொப்பரை, பகல் 2 மணியளவில் கோயிலை அடைந்தது.

அங்குள்ள 5ம் பிரகாரம் ஆயிரங்கால் மண்டபத்தில் வைக்கப்பட்ட மகா தீப கொப்பரைக்கு, இரவு 7 ம ணி ய ள வி ல் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு, பக்தர்கள் தரிசனத்துக்காக வைக்கப்பட்டது. அப்போது, ஏராளமான பக்தர்கள் தீப கொப்பரையை தரிசனம் செய்தனர். அடுத்த மாதம் 13ம் தேதி ந டை பெ று ம் ஆருத்ரா தரிசனத்தன்று, தீபச்சுடர் பிரசாதம் (தீப மை) நடராஜருக்கு அணிவிக்கப்படும். அதன்பிறகு, பக்தர்களுக்கு தீபச்சுடர் பிரசாதம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# டங்ஸ்டன் சுரங்கம் விவகாரம்: இ.பி.எஸ். குற்றச்சாட்டுக்கு அமைச்சர் துரைமுருகன் விளக்கம்



சென்னை, டிச.27
டங்ஸ்டன் கனிம சுரங்க ஏலம் தொடர்பாக எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி தமிழக அரசு மீதுகுற்றஞ்சாட்டியநிலையில் அமைச்சர் துரைமுருகன் விளக்கம் அளித்துள்ளார். துரைமுருகன் விளக்கம் அளித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

★ கனிம சுரங்க விவகாரத்தில் ஏல நடைமுறை திட்டம் சட்டம், ஒழுங்கு பிரச்சனையை ஏற்படுத்தும் என கடிதத்தில் குறிப்பிட்டேன்.

★ டஸ்ஸ்டன் சுரங்கம் அமைக்கும் முடிவை கைவிட வேண்டும் என அக்டோபரிலேயே மத்திய அரசுக்கு கடிதம்.

★ அரிட்டாப்பட்டி உயிரியல் பன்முகத்தன்மை கொண்ட பாரம்பரிய தளம் என்பதை மத்திய அரசின்கவனத்திற்குகொண்டு சென்றோம்.

★ அமைச்சகத்தால் ஏலம் மட்டுமே விட முடியும், குத்தகையை மாநில அரசுதான் வழங்க வேண்டும் என்பதை மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

★ மாநில அரசின் ஆட்சேபனையை மீறி மத்திய அரசு ஏலம் மேற்கொண்ட விவகாரத்தை முதல்வர் பிரதமரிடம் கொண்டு சென்றார்.

★ பிரதமரிடம் விவகாரம் கொண்டு செல்லப்பட்டதால் அரிட்டாப்பட்டியில் சுரங்கம் அமைக்கும் முடிவை அமைச்சகம் மறு ஆய்வு செய்ய முடிவு.

★ மறுஆய்வு செய்ய முடிவுசெய்ததில்மகிழ்ச்சி அடைகிறேன்.

★ ஆயிரக்கணக்கான மக்களின் நலன், சுற்றுச்சூழலை பாதுகாக்க இந்துஸ்தான் நிறுவனத்திற்கு வழங்கிய சுரங்க ஏலத்தை ரத்து செய்ய வேண்டும்.

இவ்வாறு விளக்கம் அளித்துள்ளார்.

# கலைஞர் நிறைந்திருக்கும் இடமெல்லாம் ஹனிபாவும் இருப்பார்! மு.க.ஸ்டாலின் புகழாரம்



சென்னை, டிச.27
திமுக தலைவரும், தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

கழகத்தின் கம்பீரக் குரல் "இசைமுரசு" நாகூர் ஹனிபா அவர்களின் நூற்றாண்டில் அவரைப் போற்றுவோம்! எல்லோரும் கொண்டாடுவோம்!

தலைவர் கலைஞரின் நண்பரும் ஆருயிர்ச் சகோதரருமான "இசைமுரசு" ஹனிபா அவர்கள் காலங்கள் கடந்து வாழ்வார்! கலைஞர் நிறைந்திருக்கும் இடமெல்லாம் ஹனிபாவும் இருப்பார்! என்று தெரிவித்துள்ளார்.

இதைத்தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று அண்ணா அறிவாலத்தில் இசை முரசு நாகூர் ஈ.எம். ஹனிபா நூற்றாண்டு பிறந்தநாளை ஒட்டி அவரது உருவப்படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தி அவரது பாடல் குறுந்தகட்டினையும் வெளியிட்டார்.

நிகழ்ச்சியில் பொதுச் செயலாளர் துரைமுருகன், ஆ.ராசா எம்.பி., அமைப்பு செயலாளர் ஆர் .எஸ். பாரதி,. டி. கே.எஸ் இளங்கோவன், தலைமை நிலைய செயலாளர்கள் பூச்சி முருகன், துறைமுகம் காஜா, எஸ். ஆஸ்டின், தாயகம் கவி எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர் சிற்றரசு, திரைப்பட இயக்குனர் கஸ்தூரிராஜா, யுகபாரதி, சுரேஷ் காமாட்சி, சி.எஸ். சாம், மீரா ஆகியோர் பங்கேற்றனர்.

# பா.ஜ.க. கூட்டணியில் இருந்து வெளிவருகிறோம் வன்னியர்களுக்கு 15% ஒதுக்கீடு கொடுப்பீர்களா?: ஜி.கே.மணி



சென்னை, டிச.27
பா.ம.க. கவுரவ தலைவர் ஜி.கே.மணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

★ நாளையே பா.ஜ.க. கூட்டணியில் இருந்து வெளியேற தயார்.

★ தி.மு.க.வுக்கு நிபந்தனை இல்லாத ஆதரவையும் வழங்குவதற்கு தயார்.

★ ஆதரவு அளித்தால் வன்னியர்களுக்கு 15 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை தி.மு.க. அரசு நிறைவேற்றுமா?

★ இப்போது உள்ள தடைகள்பா.ஜ.க. அணியிலிருந்து பா.ம.க. வெளியேறினால் உடனடியாக விலகி விடுமா?

★ நான் 25 ஆண்டுகளாக பா.ம.க. தலைவர் பதவியில் இருந்தேன்.

★ பா.ம.க.விலிருந்து கேள்வி எழுப்பினால் தி.மு.க.விலிருந்து வன்னியரை வைத்து பதில் சொல்வதை கலைஞரை தொடர்ந்து ஸ்டாலினும் செய்கிறார்.

★ பா.ம.க.வில் யார் வேண்டுமானாலும் பதவிக்கு வரலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# காவல்துறை விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி வருகிறோம்: அண்ணா பல்கலைக்கழக பதிவாளர்




சென்னை, டிச.27
சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதாக மாணவி ஒருவர் புகார் அளித்துள்ளது மிகப்பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

மாணவியின் புகார் அடிப்படையில் கோட்டூர்புரம் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். குற்றவாளிகளை பிடிக்க நான்கு சிறப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது என சென்னை போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு நபரை கைது செய்து தீவிர விசாரணை நடத்தி வருவதாக கமிஷனர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் காவல் துறை விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி வருகிறோம் என அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

காவல்துறை விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி வருகிறோம். மாணவியின் புகார் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இது போன்ற சம்பவங்கள் இனி நடைபெறாமல் இருக்க பாதுகாப்பை மேலும் பலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பதிவாளர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

புகழ்வாய்ந்த அண்ணா பல்கலைக்கழத்தின் வளாகத்தில்மாணவிக்குநேர்ந்த கொடுமை பாதுகாப்பு குறித்து கேள்வி எழுப்புவதாக அரசியல் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

# மெரினா உணவுத்திருவிழா ரூ.1.50 கோடிக்கு விற்பனை



சென்னை, டிச.27
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் சென்னை மெரினாவில் கடந்த 20ந்தேதி மகளிர் சுய உதவிக்குழுவினரின் உணவுத் திருவிழா தொடங்கியது. இதில் தமிழகத்தின்பல்வேறுமாவட்டங்களிலும் சிறப்பு வாய்ந்த பாரம்பரிய சைவ மற்றும் அசைவ உணவு வகைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டது.

முழுக்க முழுக்க மகளிர் சுய உதவிக்குழுவினர் தங்களின் கைப்பட சமைத்து வழங்கும் உணவுகளே இங்கு விற்பனை செய்யப்பட்டது.

உணவுத் திருவிழாவில் ராணிப்பேட்டை ஆற்காடு பிரியாணி, தருமபுரி ரவா கஜூர், சாமை வெண்பொங்கல், தினை இனிப்பு பொங்கல், கிருஷ்ணகிரி கம்பு பாயாசம், ஈரோடு அடை அவியல், சேலம் தட்டு வடை, கார பொறி, சிவகங்கை நெய் சாப்பாடு சிக்கன் கிரேவி, வேலூர் ராகி புட்டு, ராகி கொழுக்கட்டை, திண்டுக்கல் மட்டன் பிரியாணி, கன்னியாகுமரி பொரிச்ச பழம், கிழங்கு மீன் கறி உள்ளிட்ட உணவு வகைகளை பொதுமக்கள் விரும்பி வாங்கி சாப்பிட்டனர். மொத்தம் 286 வகையான உணவுகள் வைக்கப்பட்டு இருந்தது.

உணவுத் திருவிழா டிக்கெட் கவுண்ட்டர்களில் பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து டிக்கெட் பெற்று சென்றனர். உணவு வழங்கும் அரங்கிலும் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்களுக்கு தேவையானவற்றை மக்கள் வாங்கி விரும்பி சாப்பிட்டனர்.

இந்நிலையில் மெரினாவில் கடந்த 5 நாட்களாக நடந்த உணவுத் திருவிழாவில் 3.20 லட்சம் மக்கள் கலந்து கொண்டு, மகளிர் சுய உதவிக் குழுவினரின் ரூ.1.50 கோடி மதிப்பிலான தயாரிப்பு பொருட்கள், உணவுகளை வாங்கி உள்ளனர். 45 அரங்கங்களில் 286 வகையான சைவ, அசைவ உணவுகள், ஆயத்த உணவுப் பொருட்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் ஆகியவை விற்பனை செய்யப்பட்டதுகுறிப்பிடத்தக்கது.

# வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு நாள்.. உருவப்படத்திற்கு த.வெ.க. தலைவர் விஜய் மரியாதை



சென்னை, டிச.27
இந்தியாவின் முதல் பெண் சுதந்திர போராட்ட வீராங்கனை வேலுநாச்சியாரின் 228வது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது. இதையொட்டி சிவகங்கை அரண்மனை வாயில் முன்பு அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் குருபூஜை விழா அனுசரிக்கப்பட்டது.

ராணி வேலு நாச்சியாரின் நினைவு தினத்தையொட்டி சென்னை பனையூரில் உள்ள த.வெ.க. தலைமை அலுவலகத்தில் அவரது உருவப்படத்திற்கு விஜய் மாலை அணிவித்தும், மலர்தூவியும் மரியாதை செலுத்தினார். இது குறித்து த.வெ.க. தலைவர் விஜய் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில், "மண்ணைக் காக்க வாளேந்திப் போர்க்களம் புகுந்த வீரப் புரட்சியாளர், இந்தியாவின் முதல் விடுதலைப் பெண் போராளி, அனைத்துச் சமூகத்தினரோடும் நல்லிணக்கத்தோடு நாடாண்ட தமிழச்சி, எம் கழகத்தின் கொள்கைத் தலைவர், வீரமங்கை, ராணி வேலு நாச்சியார் அவர்களின் நினைவு தினத்தையொட்டி, எமது அலுவலகத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# எட்டயபுரம் அருகே நின்ற கார் மீது வாகனம் மோதல் 3 பேர் பலி



எட்டயபுரம், டிச.27
திருப்பூர் மாவட்டம் அலங்கியம் பகுதியை சேர்ந்தவர் விக்னேஷ். 31 வயதான இவர்சாப்ட்வேர் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார்.

முருகப் பெருமானை வேண்டி மாலை அணிந்துள்ள அவர் அறுபடை வீடுகளுக்கு சென்று சாமி தரிசனம் செய்து வந்தார்.

அவர் தனது நண்பர்கள் செல்வராஜ், விஜயகுமார், மகேஷ்குமார், ராஜ்குமார் ஆகியோருடன் காரில் சுவாமி மலைக்கு சென்றார். அங்கு சுவாமி தரிசனம் செய்துவிட்டு காரில் நேற்று இரவு திருச்செந்தூருக்கு சென்றனர்.

அவர்களது கார் இன்று அதிகாலை தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகே சென்று கொண்டிருந்தது. அப்போது காரை ஓட்டிக் கொண்டிருந்த செல்வராஜ் தூக்கம் கலைவதற்காக காரை ஓரமாக நிறுத்தி தண்ணீரை எடுத்து முகத்தை கழுவிக் கொண்டிருந்தார்.

அப்போது பின்னால் வந்த வாகனம் ஒன்று பயங்கரமாக அவர்களது காரின் மீது மோதியது. இதில்கார் அருகில் இருந்த பள்ளத்தில் உருண்டு விழுந்தது. நொறுங்கிய காருக்குள் 5 பேரும் சிக்கிக் கொண்டனர்.

இந்த கோர விபத்தில் செல்வராஜ், விஜயகுமார், விக்னேஷ் ஆகிய 3 பேரும் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். மகேஷ்குமார், ராஜ்குமார் இருவரும் பலத்த காயங்களுடன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தனர்.

இதுபற்றி தகவல் அறிந்ததும் எட்டயபுரம் போலீசார் அவர்கள் இருவரையும் மீட்டு கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

# திருச்சியில் இருந்து கோலாலம்பூர் புறப்பட்ட விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு: பயணிகள் அவதி




கே.கே.நகர், டிச.27
திருச்சி விமான நிலையத்திலிருந்து மலேசியா, சிங்கப்பூர், மஸ்கட், ஓமன், துபாய் , அபுதாபி, இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு விமான சேவைகள் இயக்கப்பட்டு வருகிறது.

இதே சென்னை, பெங்களூர், மும்பை, ஹைதராபாத் உள்ளிட்ட நகரங்களுக்கு விமான சேவைகள் இயக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் நேற்று இரவு 12.10 மணிக்கு திருச்சியில் இருந்து ஏர் ஏசியா விமானம் 150 பயணிகளுடன் மலேசியத் தலைநகர் கோலாலம்பூர் புறப்படுவதற்கு தயாராகிக் கொண்டிருந்தது.

புறப்படுவதற்கு முன்பாக விமான பைலட் விமானத்தை ஆய்வு செய்த போது விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு இருப்பதை கண்டுபிடிக்கப் பட்டது. இதனைத் தொடர்ந்துவிமானத்தில் அமர வைக்கப்பட்ட பயணிகள் அனைவரும் மீண்டும் விமானநிலைய ஓய்வு அறைக்கு அழைத்துவரப் பட்டனர்.

இதனைத் தொடர்ந்து விமானத்தை சரி செய்யும் பணியில் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஈடுபட்டனர். உதிரி பாகங்கள் இல்லாத காரணத்தினால் விமானத்தை சரி செய்யும் பணியில் தாமதம் ஏற்பட்டது.

இதனால் விமான நிலைய ஓய்வு அறையில் தங்க வைக்கப்பட்ட பயணிகளை தனியார் விடுதியில் அரை ஒதுக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் விமானத்தை சரி செய்ய உதிரி பாகங்கள் விமான நிறுவனத்தின்சார்பில் இன்று கொண்டுவரப்பட்டு சரி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் நேற்று புறப்பட வேண்டிய விமானம், இன்று இரவு திருச்சி விமான நிலையத்திலிருந்து மலேசிய தலைநகர் கோலாலம்பூர் நோக்கி புறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் அவதியடைந்த சில பயணிகள் விமான டிக்கெட் ரத்து செய்து சென்றதாகவும் தெரிய வருகிறது. இதனால் நேற்று இரவு திருச்சி விமான நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

# அரசுப் போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் கோரிக்கைக்கு முக்கியத்துவம் ஜி.கே.வாசன் வலியுறுத்தல்



சென்னை, டிச.27
த.மா.கா. தலைவர் ஜி.கே. வாசன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

தமிழக அரசு , அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்கள் கோரிக்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். கடந்த காலங்களில் ஊதிய ஒப்பந்தத்தில் 3 ஆண்டுகள் என்று கணக்கிடப்பட்டதை 4 ஆண்டுகள் என அரசு தன்னிச்சையாக மாற்றியதை அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்கள் ஏற்கவில்லை.

4 ஆண்டுகளாக மாற்றியமைத்தும் 01.09.2023 முதல் நடைமுறைப்படுத்த வேண்டிய 15 வது ஊதிய உயர்வுக்கான ஒப்பந்த பேச்சுவார்த்தை 16 மாதங்கள் கடந்தும் முடிவுறாத நிலைதான் உள்ளது. இது தொழிலாளர் நல விரோத போக்காகும். இந் நிலையில் இந்த வார இறுதியில் நடைபெறவுள்ளதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தை எவ்வித பயன் தரும் என்று எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள் தொழிலாளர்கள்.

காரணம் இப்பேச்சுவார்த்தையில் சிறுபான்மை அளவிலான 13 சங்கங்கள் அடங்கிய பேச்சுவார்த்தை ஒரு நாளிலும், பெரும்பான்மை அளவிலான 73 சங்கங்கள் அடங்கிய பேச்சுவார்த்தை அடுத்த நாளிலும் நடத்தும் அரசின் நோக்கம் என்ன என்று தொழிலாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர். அனைவரையும் அழைத்து ஒரே நாளில் பேச்சுவார்த்தை நடத்தினால் தான் சந்தேகத்திற்கு இடம் அளிக்காது என தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கடந்த காலத்தில் நடைபெற்ற அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்களுடான பேச்சுவார்த்தையில் கோரிக்கைகள் முழுமையாக நிறைவேற்ற ப்படவில்லை என்பது தொடரக் கூடாது.

பொதுமக்களின் போக்குவரத்துக்கான பேருந்துகளை இயக்கும் அரசுப் போக்குவரத்துத் துறையின் தொழிலாளர்கள் நலன், வருங்காலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை கவனத்தில் கொண்டு தமிழக அரசு செயல்பட வேண்டும்.

எனவே 01.09.2023 முதல் நடைமுறைப் படுத்த வேண்டிய ஊதிய ஒப்பந்தத்தை எவ்வித பாகுபாடின்றியும், இந்த வார இறுதிக்குள்ளாகவே 15 வது ஊதிய ஒப்பந்தத்தை பேசி முடித்து நடைமுறைக்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக அரசை தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். என தெரிவித்துள்ளார் .

# சமூக விரோதிகளுக்கு காவல்துறை மீது எந்த பயமும் இல்லை :பிரேமலதா விஜயகாந்த் கண்டனம்



சென்னை, டிச.27
சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த 21ம் தேதி மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுள்ளார் .அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக , தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத் தலைநகரத்தின் மையப்பகுதியில், பொறியியல் கல்வி தலைமை நிறுவனமான அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் பெண்களுக்குப் பாதுகாப்பில்லாத நிலை இருக்கிறது என்றால், சமூக விரோதிகளுக்கு, அரசின் மீதோ, காவல்துறையின் மீதோ எந்த பயமும் இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. உடனடியாக, இந்தக் குற்றத்தில் தொடர்புடைய அனைவர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் பாதிக்கப்பட்ட மாணவிக்கு உரிய நீதியை தமிழக அரசும், காவல் துறையும் உடனடியாக செய்ய வேண்டும். வேலியே பயிரை மேய்ந்தது" என்ற பழமொழிக்கு ஏற்ப அந்த மாணவிக்கு ஏற்பட்ட அநீதி பெரும். கண்டனத்திற்குரியது. என தெரிவித்துள்ளார்.

## திருச்செந்தூர் சென்று திரும்பியபோது கார் மீது கன்டெய்னர் லாரி மோதி 3 பேர் பலி: குடும்பத்துக்கு தலா ரூ.2 லட்சம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

எட்டயபுரம், டிச.27 திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அய்யன்தோட்டத்தை சேர்ந்தவர் செல்வராஜ்(38), பனியன்மொத்த வியாபாரி. இவர், நண்பர்கள் தாராபுரம் விவசாயி விஜயகுமார்(38), அலங்கியம் இன்ஜினியர் விக்னேஷ்(31), பழநி மகேஷ்குமார்(35), ராஜ்குமார்(35) ஆகியோர் திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கு மாலை அணிந்து விரதம் இருந்துள்ளனர். கடந்த 23ம் தேதி 5 பேரும் காரில் பழநி உள்ளிட்ட பல்வேறு கோயிலுக்கு சென்று விட்டு நேற்று முன்தினம்





திருச்செந்தூர் சென்றனர். முருகன் கோயிலில் தரிசனம் முடித்துவிட்டு நேற்று காலை திருப்பூருக்கு புறப்பட்டனர். காரை செல்வராஜ் ஓட்டினார். தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அடுத்த மேலக்கரந்தை அருகே சென்ற போது செல்வராஜிக்கு தூக்கம் வந்ததால் காரை ஓரமாக நிறுத்தி ஓய்வு எடுத்துள்ளார்.

அப்போது பின்னால் வந்த கன்டெய்னர் லாரி, கார் மீது மோதி விட்டு நிற்காமல் சென்றது. இதில் கார் பள்ளத்தில் உருண்டு விழுந்து, செல்வராஜ், விஜயகுமார், விக்னேஷ் ஆகியோர் உயிரிழந்தனர். மற்ற இருவரும் படுகாயத்துடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதுகுறித்து மாசார்பட்டி போலீசார் வழக்கு பதிந்து கன்டெய்னர் லாரி டிரைவரான தூத்துக்குடி முத்துக்குமாரை (38) கைது செய்தனர். முதல்வர் மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதோடு, குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாயும், சிகிச்சை பெற்று வரும் இருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கிட உத்தரவிட்டுள்ளேன் என கூறியுள்ளார்.

## அசாமில் விபத்தில் உயிரிழந்த ராணுவ வீரரின் உடல் 24 குண்டு முழங்க அடக்கம்

உசிலம்பட்டி, டிச.27 மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகே எம்.எஸ்.புரத்தைச் சேர்ந்த ராமர் மகன் இன்பராஜா(28). 2016ல் ராணுவத்தில் சேர்ந்த இவருக்கு, 7 மாதங்களுக்கு முன்பு எம்.கல்லுப்பட்டியைச் சேர்ந்த ஜஸ்வர்யாவுடன் திருமணம் நடந்தது. அசாம் மாநிலம் நிஹாம் பள்ளி முகாமில் பணியாற்றி வந்த இன்பராஜா சென்ற வாகனம், கடந்த





22ம் தேதி விபத்தில் சிக்கியது. இதில் இன்பராஜா பலியானார். அவரது உடல் சொந்த ஊரான எம்.எஸ்.புரத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டது. கலெக்டர் சங்கீதா, எம்எல்ஏ அய்யப்பன் மற்றும் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர். ராணுவத்தினர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். இதையடுத்து, அவருக்கு சொந்தமான தோட்டத்தில் 24 குண்டுகள் முழங்க ராணுவ மரியாதையுடன் இன்பராஜா உடல் அடக்கம் செய்யப்பட்டது.

## அவனியாபுரம், அலங்காநல்லூர், பாலமேடு ஜல்லிக்கட்டுக்கு தயாராகும் காளைகள்: ஓட்டம், நீச்சல், மண் குத்துதலுக்கு பயிற்சி

வாடிப்பட்டி, டிச.27 அவனியாபுரம், அலங்காநல்லூர், பாலமேடு ஜல்லிக்கட்டில் பங்கேற்பதற்காக வாடிப்பட்டி பகுதியில் உள்ள காளைகளுக்கு வாடிவாசலை செயற்கையாக அமைத்து தீவிர பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. தை பொங்கல் விழாவை முன்னிட்டு, மதுரைமாவட்டத்தில் ஜல்லிக்கட்டு களை கட்டும். பொங்கலன்று ஜன.14ல் அவனியாபுரம், ஜன.15ல் பாலமேடு, ஜன.16ல் அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறுகின்றன. தொடர்ந்து ஜூன் மாதம் வரை தென்மாவட்டங்கள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் ஜல்லிக்கட்டு மற்றும் மஞ்சு விரட்டு போட்டிகளை நடத்துவது வழக்கம்.

குறிப்பாக, பாலமேடு, அலங்காநல்லூரில் நடக்கும் ஜல்லிக்கட்டு போட்டிகளை காண, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், வெளிநாட்டினரும் ஆர்வமாக பங்கேற்று பார்வையிடுவார்கள். இதற்கான முன்னேற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன. மதுரை மாவட்டத்தில், பாலமேடு, அலங்காநல்லூர், வாடிப்பட்டி உள்ளிட்ட சுற்றுவட்டார ஊர்களில் ஜல்லிக்கட்டு காளைகளை அதிகளவு வளர்த்து வருகின்றனர். இவர்களுக்கு பாலமேடு, அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் தங்களது காளைகளை விளையாட விட வேண்டும். வெற்றிக்கனி பறிக்க வேண்டுமென்பது வாழ்நாள் கனவு.



இதற்காக காளைகளுக்கு நடை, நீச்சல், ஓட்டம் உள்ளிட்ட பயிற்சிகளை அளித்து வருகின்றனர். மேலும், வாரம் 2 முறை தோட்டப்பகுதிக்கு அழைத்துச் சென்று, மண் குத்துதல் பயிற்சியும் கொடுத்து வருகின்றனர். மேலும் காளைகளுக்கு ஊட்டச்சத்துமிக்க பச்சரிசி, மண்டை வெல்லம், தேங்காய், பொட்டு பருத்தி, சுண்டல், பாதாம் பருப்பு உள்ளிட்ட ஆரோக்கியம் நிறைந்த உணவுகளையும் வழங்கி வருகின்றனர். கடந்த ஆண்டுகளை போல, வரும் 2025ல் நடக்கும் ஜல்லிக்கட்டுகளிலும் தங்களது காளைகள் பங்கேற்று, வெற்றி பெற்று பரிசுகளை பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையுடன், காளைகளை தயார்படுத்தி வருவதாக கூறுகின்றனர்.

இதுகுறித்து வாடிப்பட்டியை சேர்ந்த காளை உரிமையாளரான வினோத் கூறுகையில், ''தைப் பொங்கல் விழாவை முன்னிட்டு மதுரை உள்ளிட்ட தென்மாவட்டங்களில் நடைபெறும் ஜல்லிக்கட்டுக்காக எங்களது காளைகளை தயார்படுத்தி வருகிறோம். காளைகளுக்கு காலை, மதியம், மாலை, இரவு என 4 வேளைகளும் போஷாக்கான உணவு வழங்கி வருகிறோம். குறிப்பாக இரவு நேரத்தில் மாடுகளுக்கு இரும்புச்சத்து வழங்கும் வகையில் பேரிச்சம்பழங்களை வழங்கி தயார்படுத்துவதுடன் அடிக்கடி ஜல்லிக்கட்டு காளைகளை மாதிரி வாடிவாசல் அமைத்து அதில் பழக்கி வருகிறோம். மேலும் நீர்நிலைகளுக்கு அழைத்துச்சென்று நீச்சல் பயிற்சி, மண் குத்துதல் பயிற்சி, நடை பயிற்சியும் கொடுத்து வருகிறோம். எப்போதும் எங்களுக்கு பெருமை தேடி தரும் எங்களதுஜல்லிக்கட்டு காளைகள், இந்த ஆண்டும் எங்களுக்கு பெருமையை தேடி தரும் என்ற முழு நம்பிக்கையுடன் ஜல்லிக்கட்டு காளைகளை உற்சாகமாக தயார்படுத்தி வருகிறோம்'' என்றார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் சிலர், நேற்று மதுரை மாவட்டம், வாடிபட்டிக்கு வந்திருந்தனர். இவர்கள் ஜல்லிக்கட்டு காளைகளை எப்படி போட்டிக்கு தயார்படுத்துகின்றனர் என்பதனை பார்வையிடுவதற்காக வந்ததாக தெரிவித்தனர். இது குறித்து கிருஷ்ணகிரியை சேர்ந்தகோபிகூறுகையில், ''மதுரை மாவட்டத்தில் நடைபெறும் ஜல்லிக்கட்டை ஆண்டுதோறும் ஆர்வத்துடன் காண வருவோம். அப்போது காளைகள் எப்படி இவ்வளவு எனர்ஜியாக இருக்கின்றன என்பதை அறிய ஆவலாக இருந்தது. அதனை பார்வையிடுவதற்காகவே வாடிப்பட்டி பகுதியை சுற்றி வருகிறோம். இங்கு ஜல்லிக்கட்டு காளைகளை தங்கள் வீட்டு குழந்தைகளை போல அதன் உரிமையாளர்கள் வளர்க்கின்றனர். காளைகளுக்கு அளிக்கும் உணவுகள், பயிற்சிகளை பார்வையிட்டோம். இதனைக்கண்ட எங்களுக்கும் ஜல்லிக்கட்டு காளைகளை வளர்க்க ஆர்வம் வந்து விட்டது. எங்கள் பகுதியில் ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்த வலியுறுத்துவோம்'' என்றனர்.

## பல மாநில மகளிர் சுயஉதவி குழுக்கள் தயாரிப்பு பொருட்களின் சரஸ் மேளா, மாநில அளவிலான மாபெரும் விற்பனை கண்காட்சி

சென்னை, டிச.27 இந்தியாவின் பல்வேறு மாநில மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்பு பொருட்களின் சரஸ் மேளா, மாநில அளவிலான மாபெரும் விற்பனை கண்காட்சி நாளை முதல் ஜனவரி 9ம் தேதி வரை நடக்கிறது. இதனை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்ட அறிவிப்பு: ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித் துறையானது கிராமப்புற கைவினைக் கலைஞர்கள் தங்களின் தயாரிப்புப் பொருட்களை காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் ஏதுவாக பல்வேறு மாநில அரசுகளுடன் இணைந்து 'சரஸ்' என்படும் விற்பனை கண்காட்சிகளை நடத்தி வருகிறது. இந்நிலையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் 27ம் தேதி (நாளை) மாலை 4 மணியளவில் சென்னை நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் சரஸ் மேளா மற்றும் மாநிலஅளவிலானமாபெரும் விற்பனைக் கண்காட்சியினை துவக்கி வைக்கஉள்ளார். இந்தக் கண்காட்சியில், ஆந்திரா மாநிலத்தின் அழகிய மரச் சிற்பங்கள், கொண்டப்பள்ளி பொம்மைகள், குஜராத் மாநிலத்தின் கைத்தறி ஆடைகள், பீகார் மாநிலத்தின் மதுபாணி ஓவியங்கள், கேரள மாநிலத்தின் பாரம்பரிய உணவு வகைகள், மகாராஷ்டிர மாநிலத்தின் வண்ண ஓவியங்கள் உள்ளிட்ட கலைநயம் மிகுந்த கைவினைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட உள்ளன.

மேலும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் மகளிர்சுயஉதவிக்குழுக்களின் தயாரிப்புப் பொருட்களான தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள், நாச்சியார்கோவில் குத்துவிளக்குகள், கடலூர் முந்திரிப் பருப்பு, தருமபுரி சிறுதானிய தின்பண்டங்கள், ஈரோடு தரைவிரிப்புகள், காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், கன்னியாகுமரி வாழை நார் பொருட்கள், நாமக்கல் கொல்லிமலை அரபுளி காபித்தூள், கரூர் கைத்தறி துண்டுகள், சிவகங்கை பாரம்பரிய அரிசி வகைகள், திருவண்ணாமலை ஜவ்வாது மலை தேன், சிறுதானியங்கள், தூத்துக்குடி பனைபொருட்கள், பனைவெல்லம் (கருப்பட்டி), விழுப்புரம் சுடுமண் சிற்பங்கள், கோரைப்பொருட்கள், அலங்கார விளக்கு திரைகள், விருதுநகர் செட்டிநாடு புடவைகள், அரியலூர் முந்திரி பருப்பு, கோயமுத்தூர் மூலிகை சோப்புகள், திண்டுக்கல் சின்னாளப்பட்டி சேலைகள், திருச்சி செயற்கை ஆபரணங்கள், தேனி சானிடரி நாப்கின் மற்றும் திருநெல்வேலி அல்வா போன்ற பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்படுகின்றன. 27ம் தேதி முதல் 2025 ஜனவரி 9ம் தேதி வரை நாள்தோறும் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும் சரஸ் மேளாவில் உணவு அரங்குகள், பல்வேறு கலை நிகழ்ச்சிகள், இலவசமாக வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற அம்சங்கள் நிறைந்துள்ளன. இக்கண்காட்சிக்கு அனுமதி இலவசம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கன்னியாகுமரியில் பல வண்ணங்களில் லேசர் ஒளியில் ஜொலித்த திருவள்ளுவர் சிலை: கடற்கரையில் குவிந்த சுற்றுலா பயணிகள்

கன்னியாகுமரி, டிச.27 கன்னியாகுமரியில் லேசர் ஒளியால் பல வண்ணங்களில் திருவள்ளுவர் சிலை ஜொலித்தது. கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி நேற்று ஏராளமான சுற்றுலா பயணிகள் கடற்கரையில் குவிந்தனர். சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து சுற்றுலா பயணிகள் வருகின்றனர். பண்டிகை மற்றும் விடுமுறை நாட்களில் குமரிக்கு சுற்றுலாபயணிகளின்வருகை அதிகரிக்கும். கடந்த 2000வது ஆண்டு ஜனவரி 1ம் தேதி கடல் நடுவே திருவள்ளுவர் சிலை திறக்கப்பட்டு அதன் 25ம்



ஆண்டு வெள்ளி விழா கொண்டாட்டங்கள் நடைபெற இருக்கிறது. வரும் டிசம்பர் 30ம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழாவில் பங்கேற்க கன்னியாகுமரி வருகை தருகிறார். இதையொட்டி திருவள்ளுவர் சிலை லேசர் ஒளியில் ஜொலிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் நேற்று முன்தினம் திருவள்ளுவர் சிலை லேசர் ஒளியில் பல வண்ணங்களில் ஒளிர செய்ததை சுற்றுலா பயணிகள் பலரும் கண்டு ரசித்தனர். இந்த நிலையில் நேற்று கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி காலை முதலே சுற்றுலா பயணிகள் கடற்கரையில் குவிந்தனர்.

அவர்கள் திரிவேணி சங்கமகடற்கரையில்அமர்ந்து சூரிய உதயத்தை கண்டுகளித்தனர். பெரும்பாலான சுற்றுலா பயணிகள் தங்களது செல்போனில் சூரிய உதயத்தை புகைப்படம் எடுத்து கொண்டனர். இதையடுத்து கடலில் குடும்பத்தினருடன் ஆனந்தமாக குளித்து மகிழ்ந்தனர்.

அதேபோல சுற்றுலா பயணிகள் பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் மூலம் விவேகானந்தர் மண்டபத்துக்கு சென்று சுற்றி பார்த்தனர். அசம்பாவிதங்களை தவிர்க்க கடற்கரையில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு துப்பாக்கிஏந்தியபோலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

## சமக்ர சிக்ஷா திட்டத்துக்கு நிதி ஒதுக்காத ஒன்றிய அரசு

சென்னை, டிச.27 ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககத்துக்கு (சமக்ர சிக்ஷா) ஒன்றிய அரசு தனது பங்கை வழங்காமல் நிறுத்தி வைத்துள்ளது. ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககத்தின் (சமக்ர சிக்ஷா) இயக்குநர் ஆர்த்தி, இது குறித்து தெரிவித்துள்ள விவரம்: தமிழ்நாடு முழுவதும் 6224 அரசு உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளுக்கு ஏப்ரல் முதல் ஜூலை மாதம் வரை செலுத்த வேண்டிய இணைய தள மாதாந்திர சேவைக் கட்டணத்தை செலுத்துவதற்காக ரூ.3 கோடியே 73 லட்சத்து 80 ஆயிரம் அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்விஅலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேலும், 2973 உயர்நிலை பள்ளிகளுக்கு ஆகஸ்ட் மாதத்துக்கு ரூ.1500 வீதமும், 3074 மேனிலைப் பள்ளிகளுக்கு ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கான கட்டணமாக ரூ.92 லட்சத்து 22 ஆயிரம் என ரூ.1 கோடியே 36 லட்சத்து 81 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல 3088 உயர்நிலைப் பள்ளிகளுக்கு



செப்டம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை ரூ.1 கோடியே 85 லட்சத்து 28 ஆயிரம், 3136 மேனிலைப் பள்ளிகளுக்கு அக்டோபர் முதல் டிசம்பர் வரை ரூ.1 கோடியே 41 லட்சத்து 12 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. பிஎஸ்என்எல் நிறுவனத்துக்கு கட்டணம் செலுத்த ரூ. 3 கோடியே 26 லட்சத்து 40 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதனால் உடனடியாக பாக்கியுள்ள கட்டணத்தை அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் பிஎஸ்என்எல் நிறுவனத்துக்கு செலுத்த வேண்டும். ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் வழங்கும் நிதியில் இருந்துதான் இந்த செலவு செய்யப்படுகிறது. ஆனால் ஒன்றிய அரசு தமிழக அரசுக்கு வழங்கவேண்டியநிதியை வழங்காமல் இன்னும் நிறுத்தி வைத்துள்ளது.

## பாம்பன் புதிய ரயில் பாலத்தில் குறைபாடு சரி செய்யப்பட்டதா? மதுரை கோட்ட மேலாளர் ஆய்வு

ராமேஸ்வரம், டிச.27 பாம்பன் புதிய ரயில் பாலத்தில், மதுரை கோட்ட மேலாளர் சரத் ஸ்ரீவஸ்தவா நேற்று ஆய்வு மேற்கொண்டார். ராமேஸ்வரம் அருகே பாம்பன் கடலில் ரூ.550 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்ட இரட்டை வழித்தட மின்சார ரயில் பாலம் பணிகள் முழுமையாக நிறைவு பெற்று, ரயில்வே பாதுகாப்பு ஆணையத்தின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. கடந்த மாதம் 26ம் தேதி வெளியான சி.ஆர்எஸ் ஆய்வின் அறிக்கையில் பாலத்தில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி அதனை சரி செய்த 75 கி.மீ வேகத்தில் ரயிலை இயக்கலாம் என ரயில்வே பாதுகாப்பு ஆணையர் சவுத்ரி தெரிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியதால் புதிய ரயில் பாலத்தின் பாதுகாப்பு மற்றும் உதவி திறனை ஆய்வு செய்ய 5 பேர் கொண்ட புதிய கமிட்டி பாலத்தின் நிலை குறித்து ஆராய்ந்து வருகிறது. இதனிடையே இம்மாத துவக்கத்தில் இருந்து ரயில் பாலத்தில் குறைபாடுகளை சரி செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. புதிய ரயில் பாலத்தில் நேற்று மதுரை கோட்ட மேலாளர் சரத் ஸ்ரீவஸ்தவா டிராலியில்




சென்று பாலத்தில் பொருத்தப்பட்டுள்ள இரும்பு கர்டர்களின் இணைப்புகளை பார்வையிட்டு செங்குத்து தூக்கு பாலத்தின் அருகே ஆபரேட்டர்அறையில்இறங்கி ஆய்வு செய்தார்.

செங்குத்து பாலத்தின் தூண் உள்ளே உள்ள லிப்ட் மூலம் மேலே சென்று தூக்கு பாலத்தை உயர்த்தி, இறக்கி சோதனை செய்தார். சிஆர்எஸ் ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய குறைபாடுகள் முழுமையாக சரி செய்யப்பட்டுள்ளதா என அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டார். புதிய ரயில் பாலத்தின்உறுதித்திறனை ஆராய்வதற்கு அமைக்கப்பட்டிருக்கும் 5 பேர் கொண்ட புதிய கமிட்டியிடம்புதிய ஆய்வு அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பின்பாலத்தில்புதியரயில் இயக்குவது குறித்து தகவல் வெளியாகும்.

## திருச்சியில் இருந்து மலேசியா கிளம்பிய விமானத்தில் திடீர் கோளாறு அவசரமாக தரையிறக்கம்: 140 பயணிகள் தப்பினர்

திருச்சி, டிச.27 திருச்சி விமான நிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு மேலேஏறியவிமானத்தில் திடீர் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. தொடர்ந்து, விமானம் அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டதால் 140 பயணிகள் உயிர் தப்பினர். திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் (24ம்தேதி) நள்ளிரவு 12.10 மணிக்கு மலேசியா தலைநகர் கோலாம்பூர் செல்வதற்காக விமானம் புறப்பட தயாரானது. இதில் 140 பயணிகள் இருந்தனர். விமானம் புறப்பட்டு, ஓடுபாதையை விட்டு மேலே ஏற துவங்கிய போது திடீரென தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது.

இதைத்தொடர்ந்து, விமானம் மேலும் உயரே செல்ல முடியவில்லை. இதனால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து விமானி, கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்ததுடன், விமானத்தை சாமர்த்தியமாக மீண்டும் ஓடு தளத்திலேயே இறக்கினார். விமானம் கட்டுப்பாட்டுக்குள் வந்தது உறுதி செய்யப்பட்டது. விமான கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்த உடன், தீய



ணைப்பு துறை உள்ளிட்ட பாதுகாப்பு குழுவினர் தயார் நிலையில் இருந்தனர். இதையடுத்து 140 பயணிகளும் விமானத்திலிருந்து இறக்கப்பட்டு காத்திருப்பு அறையில் தங்க வைக்கப்பட்டனர்.

தொழில்நுட்ப கோளாறால் விமானம் தரையிறக்கப்பட்டது அவர்களுக்கு பின்னர்தான் தெரிய வந்தது. மேலும், பயணிகளுக்கு உணவு உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டது. டெல்லியில் இருந்து வந்த தொழில்நுட்ப வல்லுனர்கள், விமானத்தில் தொழில்நுட்ப கோளாறுகளை சரி செய்தனர். பழுது சரி செய்யப்பட்டவுடன் மீண்டும் 25ம்தேதி (நேற்று) நள்ளிரவு 12.10 மணிக்கு விமானம் மலேசியா புறப்படும் என்று அறிவிக்கப்பட்டது. 140 பயணிகளில், 70 பேர் பயணத்தை ரத்து செய்து விட்டு சென்றனர். மற்றவர்கள் காத்திருந்து மாற்று விமானத்தில் சென்றனர்.

## வேதாரண்யம் அருகே கடற்கரையில் ஒதுங்கிய 5 டன் உலோக மிதவை



வேதாரண்யம், டிச.27 வேதாரண்யம் அருகே கடற்கரையில் 5 டன் எடை உலோக மிதவை நேற்று கரை ஒதுங்கியது. இது தொடர்பாக போலீசார் விசாரித்து வருகின்றனர். நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் அடுத்த கோடியக்கரை கடற்கரையில் உலோகத்தில் ஆன மிதவை ஒன்று நேற்று காலை கரை ஒதுங்கியது. இந்த மிதவை, துறைமுகங்களில் கப்பலுக்கு ஆழமான பகுதியை அடையாளப்படுத்துவதற்காக நிறுத்தப்படுவதாகும். தகவலறிந்த வேட்டைக்காரன் இருப்பு போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று மிதவையை பார்வையிட்டனர். இந்த மிதவை சுமார் 12 அடி உயரம், 10 அடி அகலம், 5 டன் எடை கொண்டதும், இந்த மிதவை கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு புதுப்பள்ளி கடற்கரையில் ஒதுங்கியதும், அதிக எடை இருந்ததால் அதனை மீட்க முடியாதநிலையில்அப்படியே விட்டு விட்டு சென்றதும், நான்கு ஆண்டு கழித்து புதுப்பள்ளியில் இருந்து 5 கிலோமீட்டர்தூரம் உள்ள கோவில்பத்து கடற்கரை பகுதிக்கு கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து கரை ஒதுங்கி உள்ளது எனவும் தெரிய வந்தது. கரை ஒதுங்கிய மிதவையை ஏராளமான பொதுமக்கள் பார்த்து சென்றனர்.

# கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி கோயம்பேடு மார்க்கெட்டில் பூக்களின் விலை 3 மடங்கு உயர்வு: அனைத்தும் விற்றுத் தீர்ந்ததால் வியாபாரிகள் மகிழ்ச்சி

சென்னை, டிச.27

கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு, கோயம்பேடு மார்க்கெட்டில் பூக்களின் விலை 3 மடங்கு உயர்ந்தது. அனைத்து பூக்களும் விறுவிறுப்பாக விற்றுத் தீர்ந்ததால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்தனர். ஒரு கிலோ மல்லி 2,300 ரூபாயிலிருந்து 2,700க்கும், ஐஸ் மல்லி 1,800லிருந்து 2,500க்கும் முல்லை 900க்கும் ஜாதி மல்லி 700க்கும் கனகாம்பரம் 800லிருந்து 1000க்கும் சாமந்தி 100லிருந்து 80க்கும் சம்பங்கி 100க்கும் அரளி பூ 400லிருந்து 250க்கும் பன்னீர் ரோஸ் 120லிருந்து 100க்கும் சாக்லேட் ரோஸ் 180லிருந்து 140க்கும் விற்பனையானது.



இதுகுறித்து, கோயம்பேடு பூ மார்க்கெட் துணை தலைவர் முத்துராஜ் கூறுகையில், ‘‘கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு மல்லி, ஜாதி மல்லி, முல்லை, கனகாம்பரம் ஆகிய பூக்களின் விலை கிடுகிடுவென உயர்ந்தது. பூக்களின் விலை உயர்ந்தாலும் பண்டிகை நாள் என்பதால் சென்னை மற்றும் புறநகர் சில்லரை வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் பூக்களை வாங்குவதற்கு அதிக அளவில் குவிந்ததால் வியாபாரம் விறுவிறுப்பாக நடந்தது. இதன் காரணமாக, விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர். அதேபோல் சாமந்தி, சம்பங்கி, பன்னீர் ரோஸ், சாக்லேட் ரோஸ் ஆகிய பூக்களின் விலை சற்று குறைந்ததால் பூக்களின் வியாபாரம் கூட விறுவிறுப்பாக நடந்தது. அனைத்து பூக்களும் சற்று நேரத்தில் விற்பனையானதால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

# இலங்கை சிறையிலுள்ள மீனவர்களை விடுவிக்க கோரி ராமேஸ்வரம் மீனவர்கள் வேலைநிறுத்தம்: 700 படகுகள் கரைநிறுத்தம்

ராமேஸ்வரம்,டிச.27

இலங்கை சிறையிலுள்ள மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்க கோரி ராமேஸ்வரத்தில் இன்று மீனவர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், 700 விசைப்படகுகள் கரைநிறுத்தம் செய்யப்பட்டு உள்ளன. ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம்மீன்பிடிதுறைமுகத்தில் இருந்து நேற்று முன்தினம் 386 விசைப்படகுகள் மீன்பிடி அனுமதி டோக்கன் பெற்று கடலுக்கு சென்றன. பாக் ஜலசந்தி கடலில் மீன்பிடித்து கொண்டிருந்த மீனவர்கள் இருதயம் (59), ஆரோக்கியதாஸ் (49), அந்தோணியார் அடிமை (64), ரோகன் லியன் (54), ராமச்சந்திரன் (40) உட்பட 17 பேரை 2 படகுகளுடன் இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.



அவர்களை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி யாழ்ப்பாணம் இலங்கை சிறையில் அடைத்தனர். இலங்கை கடற்படையின் அத்துமீறிய சிறைபிடிப்பு நடவடிக்கையை கண்டித்தும், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், பறிமுதல் படகுகளையும் ஒன்றிய அரசு மீட்டுத்தர வலியுறுத்தி ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் இன்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் 700க்கும் அதிகமான விசைப்படகுகள் கரைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன.

# கோவை அருகே கர்ப்பிணி யானை மாரடைப்பால் சாவு

பெ.நா.பாளையம், டிச.27

கோவை தடாகம் அருகே அமர்ந்த நிலையில் உயிரிழந்த கர்ப்பிணி யானை மாரடைப்பால் இறந்தது என உடற்கூராய்வில் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. கோவை பன்னீர்மடை அருகே வருப்பாளையத்தில் உள்ள தனியாருக்கு சொந்தமான இடத்தில் அமர்ந்த நிலையில் பெண் யானை நேற்று இறந்து கிடந்தது. தகவலறிந்து வனத்துறையினர், சம்பவ இடத்துக்கு வந்து சோதனை செய்தனர். அப்போது யானை கர்ப்பமாக இருப்பது தெரியவந்தது.



மேலும் கால்நடை மருத்துவர் நடத்திய உடற்கூராய்வில், காட்டு யானைக்கு 30 வயது என்பதும், இதயம், ஈரல், நுரையீரல் பகுதியில் வீக்கம் ஏற்பட்டு மயங்கி விழுந்துள்ளதும் தெரியவந்தது. எழுந்திருக்க முயன்றபோது மாரடைப்பு ஏற்பட்டு உட்கார்ந்த நிலையிலேயே இறந்ததாக மருத்துவர்களின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனைகட்டி வனபகுதியில் கால்நடை மருத்துவர்கள், யானைக்கு பிரேத பரிசோதனை செய்தனர்.

# சமூக விரோதிகள் வைத்த தீயால் எரிந்த 30 பனை மரங்கள் எரிந்து கருகியது

புதுச்சேரி, டிச.27

சமூக விரோதிகள் வைத்த தீயால் 30க்கும் மேற்பட்ட பனைமரங்கள் பற்றி எரிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. புதுச்சேரி பூரணாங்குப்பம் அடுத்த புதுக்குப்பம் கடற்கரையையொட்டி கடல் அரிப்பை தடுக்கும் வகையில், பனைமரங்கள் வரிசையாக நடப்பட்டு வளர்ந்துள்ளது. இவைகள், இந்த சாலையில் செல்லும் போது ரசிக்கும் வகையிலும் இருக்கும். இந்நிலையில் நேற்று மாலை சமூகவிரோதிகள்சிலர், அப்பகுதியில் உள்ள தோப்பில் அமர்ந்து மது குடித்துவிட்டு போதையில் பனை மரத்தை தீ வைத்து எரித்துள்ளனர்.



தீ கொழுந்துவிட்டு எரிந்து காட்டு தீ போல அருகில் இருந்த மற்ற மரங்களுக்கும் பரவியது. இதில் 30க்கும் மேற்பட்ட மரங்களும் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. இதுகுறித்து பொதுமக்கள், தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த புதுச்சேரி தீயணைப்புவீரர்கள், போராடி தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர். இதுகுறித்து பனை விதை ஆர்வலர்கள் கூறுகையில், ‘பனை மரங்கள் புயலின் வேகத்தை கட்டுப்படுத்தக்கூடியது, நிலத்தடி நீரை சேமித்து குடிநீருக்கு ஆதாரமாக விளங்குகிறது. பனம் கிழங்கு, பனம்பழம் ஆகியவை மக்களுக்கு உணவாக அமைந்துள்ளது. குடி போதையில் பனமரத்தை எரித்தவர்களை கண்டுபிடித்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என்றனர்.

# ஒரு பீர்பாட்டிலுக்கு கூடுதலாக ரூ.20 ; டாஸ்மாக் கடைகளில் தொடரும் வசூல் வேட்டை: வீடியோ வைரலால் பரபரப்பு

செங்கல்பட்டு, டிச.27

செங்கல்பட்டு மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் டாஸ்மாக் கடைகளில் பீர் மற்றும் பல்வகை மதுபானங்களுக்கு கூடுதலாக ரூ.20 வாங்கி, தொடர்ந்துவசூல்வேட்டை நடைபெற்று வருகிறது. இதுதொடர்பாக கடை ஊழியர்களிடம் மதுபிரியர் வாக்குவாதம் செய்யும் வீடியோ காட்சிகள் பல்வேறு சமூக வலைதளங்களில் வைரலாகப் பரவி பரபரப்பை ஏற்படுத்தியது. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களில் இயங்கி வரும் அரசு டாஸ்மாக் கடைகளில் விற்பனை செய்யப்படும் மதுபானங்களுக்கு உரிய ரசீது வழங்க வேண்டும்.

இதை மீறி கூடுதலாக பணம் வசூலிக்கும் ஊழியர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று டாஸ்மாக் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. எனினும், அனைத்து டாஸ்மாக் கடைகளிலும் ஊழியர்கள் ஒவ்வொரு மதுபாட்டிலுக்கும் கூடுதலான பணத்தை வசூலித்து வருகின்றனர். இதனால் அதிகாரிகளின் நடவடிக்கை எவ்வித பயனும் இன்றி உள்ளது. இதன் ஒரு பகுதியாக, செங்கல்பட்டு மாவட்டத்தின் அனைத்து டாஸ்மாக் கடைகளிலும் மதுபானங்களுக்கு கூடுதல் விலை வைத்து ஊழியர்கள் வசூலித்து வருவதாக கூறப்படுகிறது.



குறிப்பாக, செங்கல்பட்டு நகரில் அமைந்துள்ள ஒரு டாஸ்மாக் கடையில் நேற்று பீர்வாங்க வந்திருந்த மதுபிரியரிடம் கூடுதலாக 20 ரூபாய் தரும்படி ஊழியர் மிரட்டும் தொனியில் கேட்டுள்ளார். இதுதொடர்பாக மதுபிரியருக்கும் கடை ஊழியர்களுக்கும் இடையே வாக்குவாதம் முற்றியது. இதில் இருவரும் தகாத வார்த்தைகளால் திட்டிக் கொள்ளும் காட்சிகளை பலர் செல்போனில் வீடியோவாக படம்பிடித்து, பல்வேறு சமூக வலைதளங்களில் வெளியிட்டனர். இதனால் செங்கல்பட்டு பகுதியில் பரபரப்பு நிலவியது. இதுபோன்ற ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று மதுபிரியர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.


# தமிழ்நாட்டில் திரையரங்கு பராமரிப்பு கட்டணத்தை உயர்வு: தமிழக அரசு

சென்னை, டிச.27

திரையரங்குகளில் கட்டண உயர்வு குறித்து திரையரங்க உரிமையாளர்கள் இன்று விளக்கம் அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு திரையரங்கு உரிமையாளர்கள் சங்கம், சில நாட்களுக்கு முன்பு திரையரங்குகளின் பராமரிப்புக் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தது. அதன்படி, திரையரங்கு உரிமையாளர்கள் தரப்பில் ஏசி அல்லாத திரையரங்குக்கு 2 ரூபாயில் இருந்து 5 ரூபாயாகவும், ஏசி திரையரங்குகளுக்கு 4 ரூபாயிலிருந்து 10 ரூபாயாகவும் கட்டணம் உயர்த்த கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில், திரையரங்கு பராமரிப்பு கட்டணத்தை உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. அதில், ஏசி அல்லாத திரையரங்குகளுக்கு 2 ரூபாயில் இருந்து 3 ரூபாயாக பராமரிப்பு கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல், ஏசி திரையரங்குகளுக்கு 4 ரூபாயிலிருந்து 6 ரூபாயாக பராமரிப்பு கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் தியேட்டர் டிக்கெட் கட்டணத்தில் மாற்றங்கள் ஏற்படும். திரையரங்குகளில் கூடுதல் கட்டணம் எவ்வளவு என்பது குறித்து திரையரங்குகள் உரிமையாளர்கள் இன்று விளக்கம் அளிப்பார்கள் என தகவல் வெளியாகி உள்ளது.

# ஐந்து நாட்களில் விடுதலை 2 படத்தின் வசூல்...எவ்வளவு தெரியுமா?



இயக்குனர் வெற்றிமாறன் இயக்கத்தில் கடந்த ஆண்டு வெளியான திரைப்படம் 'விடுதலை'. இந்த படத்தில் நடிகர் சூரி கதாநாயகனாக நடிக்க அவருடன் இணைந்து விஜய் சேதுபதி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். இந்த படம் ரசிகர்கள் மத்தியில் வசூல் ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது. இந்த படத்தின் வெற்றியை தொடர்ந்து இதன் இரண்டாவது பாகம் உருவாகியுள்ளது.

விடுதலை 2 படத்தில் சூரி, விஜய் சேதுபதி ஆகியோருடன் இணைந்து சேத்தன், மூணார் ரமேஷ், பவானிஸ்ரீ, இளவரசு, பாலாஜி சக்திவேல், மஞ்சுவாரியர், கிஷோர், போஸ்வெங்கட் உள்ளிட்ட பலர்நடித்துள்ளனர். இந்த படத்திற்கும் இசைஞானி இளையராஜா இசையமைத்துள்ளார்.

இயக்குனர் வெற்றிமாறன் இயக்கத்தில் உருவான 'விடுதலை 2' திரைப்படம் கடந்த 20ம் தேதி திரையரங்குகளில் வெளியானது. மக்களுக்காக போராடிய, ஆனாலும் மக்களுக்கே தெரியாத, தலைவர்கள் குறித்து இப்படம் பேசியுள்ளது. இப்படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இந்த நிலையில் விடுதலை 2 திரைப்படத்தின் வசூல் குறித்த தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, இப்படம் உலகளவில் இதுவரை (5 நாட்களில்) ரூ. 42 கோடி வசூல் செய்துள்ளது. குறிப்பாக தமிழ் நாட்டில் மட்டும் ரூ. 28 கோடிக்கும் மேல் வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது. ஆனால் இன்னமும் படத்தின் வசூல் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பினை படக்குழு வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜிம்பாப்வேவுக்கு எதிரான டெஸ்ட்; ரஷித் கான் விளையாட மாட்டார்..?





ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டி20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற டி20 தொடரை 21 என்ற கணக்கிலும், அடுத்து நடைபெற்ற ஒருநாள் தொடரை 20 என்ற கணக்கிலும் ஆப்கானிஸ்தான் அணி கைப்பற்றியது.

இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான டெஸ்ட் தொடர்நாளை தொடங்குகிறது. ஆப்கானிஸ்தான் ஜிம்பாப்வே இடையிலான பாக்சிங் டே டெஸ்ட் நாளை புலவாயோவில் தொடங்குகிறது. இந்நிலையில், இந்த ஆட்டத்தில் ஆப்கானிஸ்தானின் நட்சத்திர வீரரான ரஷித் கான் விளையாட மாட்டார் என தகவல்கள் வெளியாகி உள்ளது.

இதுகுறித்து வெளியான தகவலின் படி, ஆப்கானிஸ்தான் நட்சத்திர வீரர் ரஷித் கான் ஒரு தொண்டு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளத் திட்டமிட்டுள்ளதால், ஜிம்பாப்வேவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் அவர் பங்கேற்க மாட்டார்.

அதேசமயம் இத்தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான அணியில் அவர் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது. இது ஆப்கானிஸ்தான் அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தும் விதமாக பார்க்கப்படுகிறது.

# ஆதி நடித்துள்ள 'சப்தம்' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




இயக்குனர் அறிவழகன் இயக்கத்தில் 2009ம் ஆண்டு வெளியான 'ஈரம்' திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்றது. அதில் நடிகர் ஆதி, சிந்து மேனன், நந்தா துரைராஜ், சரன்யா மோகன் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். இப்படத்தின் வெற்றிக்கு பின்னர் 14 ஆண்டுகள் கழித்து மீண்டும் நடிகர் ஆதியுடன் கூட்டணி அமைத்து சம்பதம் என்ற படத்தை இயக்கியுள்ளார் இயக்குனர் அறிவழகன்.

இப்படத்தில் ஆதியுடன் சிம்ரன், லைலா, லட்சுமி மேனன், ரெடின் கிங்ஸ்லி, எம்.எஸ்.பாஸ்கர், ராஜீவ் மேனன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளார்கள். இந்த படத்தை 7ஜி பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்க தமன் இசையமைத்துள்ளார். ஈரம் படத்தை போலவே இந்த படமும் சஸ்பென்ஸ், திகில் பாணியில் உருவாகியுள்ளது. இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் மற்றும் டீசர் சமீபத்தில் வெளியாகி வைரலானது.

ஏற்கனவே இந்த படத்தின் படப்பிடிப்புகள் நிறைவடைந்த நிலையில், தற்போது படத்தின் பின்னணி வேலைகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் இந்த படத்தின் ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் 28ஆம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாக்சிங் டே டெஸ்ட்; 2 ஸ்பின்னர்களுடன் களம் இறங்கும் இந்தியா...? வெளியான தகவல்

ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதுவரை நடந்துள்ள 3 டெஸ்ட் முடிவில் தொடர் 11 என்ற கணக்கில் சமனில் உள்ளது. ஒரு ஆட்டம் டிராவில் முடிந்தது.




இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 4வது டெஸ்ட் போட்டி மெல்போர்னில் நாளை (வியாழக்கிழமை) தொடங்குகிறது. இந்திய நேரப்படி அதிகாலை 5 மணிக்கு போட்டி தொடங்குகிறது. கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு மறுநாள் 'பாக்சிங் டே' என்ற பாரம்பரிய சிறப்புடன் தொடங்கும் இந்த போட்டிக்காக இந்திய வீரர்கள் கடந்த 21ந்தேதியில் இருந்து அங்கு பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இந்த போட்டியில் இந்திய அணி 2 ஸ்பின்னர்களுடன் களம் இறங்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ரவீந்திர ஜடேஜா மற்றும் வாஷிங்டன் சுந்தர் இருவரும் ஆடும் லெவனில் இடம் பெற உள்ளதாக கூறப்படுகிறது. சுந்தர் ஆடும் லெவனில் இடம் பெறுவதால் நிதிஷ் குமார் ரெட்டிக்கு நாளைய ஆட்டத்தில் இடம் கிடைக்காது என தகவல் வெளியாகி உள்ளது.

மேலும், நாளைய ஆட்டத்தில் ஜெய்ஸ்வாலுடன், ரோகித் சர்மா தொடக்க வீரராக களம் இறங்க உள்ளதாகவும். ராகுல் 3ம் இடத்தில் ஆட உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. சுப்மன் கில் எந்த இடத்தில் விளையாடுவார் என்பது குறித்து தகவல் வெளியாகவில்லை.

# விடாமுயற்சி படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் எப்போது வெளியாகும் ? படக்குழு அறிவிப்பு



தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகரான அஜித், துணிவு படத்தை தொடர்ந்து 'விடாமுயற்சி' படத்தில் நடித்துள்ளார். மகிழ்த்திருமேனி இயக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். லைகா நிறுவனம் இப்படத்தை தயாரித்துள்ளது. இந்த படத்தில் அர்ஜுன், திரிஷா, ரெஜினா, சந்தீப் கிஷன், ஆரவ் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் 'விடாமுயற்சி' வெளியாகிறது. இந்நிலையில், நடிகர் அஜித்குமாரின் 'விடாமுயற்சி' படத்தின் டீசர் கடந்த மாதம் 28ந் தேதிவெளியானது.

ஆக்ஷன் திரில்லர் கதைக்களத்தில் உருவாகியுள்ள இத்திரைப்படம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் பொங்கல் பண்டிகை அன்று வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இப்படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் வருகிற 27ந் தேதி வெளியாகும் என மதியம் 1 மணிக்கு வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. இதனால் ரசிகர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் .

# இளம் வீரர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி அவர்களுக்கு சிக்கலை ஏற்படுத்த விரும்பவில்லை ரோகித் சர்மா

ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதுவரை நடந்துள்ள 3 டெஸ்ட் முடிவில் தொடர் 11 என்ற கணக்கில் சமனில் உள்ளது. ஒரு ஆட்டம் டிராவில் முடிந்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 4வது டெஸ்ட் போட்டி மெல்போர்னில் நாளை (வியாழக்கிழமை) தொடங்குகிறது. இந்திய நேரப்படி அதிகாலை 5 மணிக்கு போட்டி தொடங்குகிறது. கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு மறுநாள் 'பாக்சிங் டே' என்ற பாரம்பரிய சிறப்புடன் தொடங்கும் இந்த போட்டிக்காக இந்திய வீரர்கள் கடந்த 21ந்தேதியில் இருந்து அங்கு பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் இந்திய கேப்டன் ரோகித் சர்மா செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கில், ஜெய்ஸ்வால் போன்ற இளம் வீரர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி அவர்களுக்கு சிக்கலை ஏற்படுத்த விரும்பவில்லை என கூறினார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, ஜெய்ஸ்வால், சுப்மன் கில், ரிஷப் பண்ட் போன்ற வீரர்களின் பார்ம் குறித்து கேட்கிறீர்கள். அவர்கள் அனைவரும் இளம் வீரர்கள். ஒரே நிலையில் பயணிக்கிறார்கள். தங்களிடம் இருந்து அணி நிர்வாகம் என்ன எதிர்பார்க்கிறது என்பதை அறிவார்கள். அதிகப்படியான ஆலோசனைகளை வழங்கி அவர்களுக்கு சிக்கலை ஏற்படுத்த விரும்பவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.